ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு)

(மலர்-94) Apr (1) / 2011



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

## உட்பொதிவு


1. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் (ஸ்வாமி பராசரபட்டர் பாஷ்யம்)…………………......3

2. ஸ்ரீபாஷ்யம் ……………………………………………………………………......5

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ……………………………………….………....7

4. ஸ்ரீவசனபூஷணம்…………………………………………………………………...10

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)……….…………………………………….....18

6. திருவிருத்தம்.....................……………………………………………………......25

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்

(பகுதி – 71)

## 433. மஹாகோச:

எப்போதும், அனைவருக்கும், அனைத்துவிதங்களிலும் வழங்கினால் கூட, சற்றும் குறையாமல் பெரியதாக உள்ள சங்கம், பத்மம் போன்ற ஒன்பது விதமான நிதிகளைக் கொண்டவன்; மேரு உள்ளிட்ட மலைகளை அந்த நிதிகளின் இருப்பிடமாகக் கொண்டவன். இதனால் மஹாகோசன் என்னும் திருநாமம் பெற்றவன் ஆவான் (குறிப்பு: ஒன்பது நிதிகள் = சங்கம், பத்மம், மஹாபத்மம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம் மற்றும் கர்வசூல்வரம்).

## 434. மஹாபோக:

அர்த்தம் என்னும் செல்வத்தினால் கிட்டக்கூடிய போகங்கள் அனைத்தும் தன்னால் கிட்டக்கூடியபடி உள்ளவன். இதனால் மஹாபோகன் என்னும் திருநாமம் பெற்றவன் ஆவான். கீதையில் (7-22) – லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹிதாந் – செல்வத்தின் பொருட்டு பல தேவதைகளையும் ஆராதிக்கின்றனர்; அவர்கள் மூலமாக நானே அனைத்தையும் அளிக்கிறேன் – என்றான்.

## 435. மஹாதந:

அளவிட இயலாதபடி பெரும் செல்வத்தைக் கொண்டவன். இதனை ப்ரஹ்லாதன் கீழே உள்ளபடி உரைக்கிறான். விஷ்ணுபுராணம் (1-18-23) – மரீசி மித்ரை: தக்ஷேண தததைவ அந்யை: அநந்தத: தர்ம: ப்ராப்த: ததா ச அந்யை: அர்த்த: காம: ததா பரை: - ஸர்வேச்வரனிடமிருந்து மரீசி, தக்ஷர் போன்றவர்களால் தர்மங்கள் அடையப்பட்டன; ஒரு சிலரால் செல்வங்கள் அடையப்பட்டன; ஒரு சிலரால்

விருப்பங்கள் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டன; அவன் குறைவற்ற செல்வம் கொண்டவன் – என்றது காண்க.

## 436. அநிர்விண்ண:

இப்படியாக ஸ்ருஷ்டி உள்ளிட்டவைகளையும், அவரவர்களுக்கு வேண்டியவைகளையும் அடிக்கடி செய்து வருகிறான். ஸம்ஸாரிகள் உலகவிஷயங்களின் மீது உண்டான ப்ரீதி காரணமாகத் தன்னை உதாஸீனம் செய்யும்போது, தான் அவர்களுக்காகச் செய்த அனைத்தும் வீணாகப் போனது என்று எண்ணாமல், அவர்களை மீண்டும் தன்பக்கம் இழுக்கலாம் என்னும் ஆசை காரணமாக சற்றும் ஓய்வு என்பதே இல்லாமல் தொடர்ந்து முயல்கிறான். இதனால் அல்லவோ இந்த உலகத்தின் ஸ்ருஷ்டி என்பது தொடர்ந்தபடி உள்ளது! விஷ்ணுபுராணம் (1-2-26) – அவ்யுச்சிந்நா: ததஸ்த்வேதே ஸர்க ஸ்திதியந்த ஸம்யமா: - ஸ்ருஷ்டி, ஸ்திதி மற்றும் ஸம்ஹாரம் ஆகியவற்றை ஸர்வேச்வரன் எந்தவிதமான தடைகளும் இன்றி செய்தபடி உள்ளான் – என்றது.

## 437. ஸ்தவிஷ்ட:

மிகவும் பெரியவனாக உள்ளவன். இந்தக் கருத்தானது விஷ்ணுபுராணத்தில் மிகவும் தெளிவாக உள்ளது. மிகவும் பெரிய நக்ஷத்திரக் கூட்டமான சிம்சுமாரம் என்பதைப் போன்றவன். விஷ்ணுபுராணம் (2-9-1) – தாராமயம் பகவத: சிம்சுமாராக்ருதி ப்ரபோ: - என்று இதனைக் கூறியது காண்க.

அழகியமணவாளன் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பராசரபட்டர் திருவடிகளே தஞ்சம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 94)

## மஹாஸித்தாந்தம்

மேலே கூறப்பட்ட பல விஷயங்களும் யாரால் உரைக்கப்பட்டன என்றால் - உபநிஷத்துக்களால் விளக்கப்படும் பரமபுருஷனால் "தன்னுடையவர்கள்" என்று ஏற்றுக் கொள்வதற்குக் காரணமான எந்தவிதமான சிறப்பான குணங்களும் அற்றவர்கள்; (ஏன் இவ்விதம் ஆனார்கள்) எல்லையற்ற காலமாகச் செய்து வரும் பாவங்களின் காரணமாக அல்லது பாவவாசனை காரணமாக அவர்களது நல்ல ஞானமானது கெடுக்கப்பட்டு அஞ்ஞானம் சூழ்ந்தவர்கள்; (ஞானம் எப்படிக் கெடுகிறது) பதவாக்கியங்களின் ஸ்வரூபம், அந்தப் பதங்கள் மற்றும் வாக்கியங்களால் உணர்த்தப்படும் ஆழ்பொருளில் உள்ள உண்மைகள், ப்ரத்யக்ஷம் போன்ற அனைத்து ப்ரமாணங்கள் என்ன உணர்த்துகின்றனவோ அவற்றின் ஸ்வரூபம், அத்தகைய அர்த்தங்களின் அங்கங்களாக உள்ள ந்யாய மார்க்கங்கள் ஆகியவற்றை அறியாதவர்கள் - ஆகிய துர்வாதிகள் ஆவர். அவர்கள் கூறிய அனைத்தும் ப்ரமாணங்களுக்கு முரணாகவும், ஒன்றுக்கு ஒன்று முரண்பாடு கொண்டதாகவும், சாரம் அற்றதாகவும் உள்ள குதர்க்கமானவை ஆகும். எனவே இவை பற்பல ந்யாயங்களால் துணை நிற்பவர்களும், ப்ரத்யக்ஷம் உள்ளிட்ட ப்ரமாணங்கள் எவ்விதம் போதிக்கின்றனவோ அவற்றின் வழி முறைகளையும், உண்மையையும் அறிந்தவர்களாகவும் உள்ளவர்களால் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல.

## நிர்விசேஷம் என்பதற்கு ப்ரமாணம் இல்லை

நிர்விசேஷவஸ்துவாதிகளால் (ப்ரஹ்மம் உட்பட குணங்கள் ஏதும் அற்றதான வஸ்துக்கள் என்று கூறுபவர்கள்) நிர்விசேஷ வஸ்துக்களின் விஷயத்தில் ப்ரமாணம் ஏதும் கூற இயலாது; இதன் காரணம் அனைத்து ப்ரமாணங்களும்

விசேஷத்துடன் கூடியதான வஸ்துக்களை (குணங்களுடன் கூடியது) விவரித்து உரைப்பதாகவே உள்ளன. இதற்கு அவர்கள் - தங்களுடைய அனுபவத்தின் மூலமாக இந்த வாதத்தை வைக்கிறோம் என்று தங்களைச் சேர்ந்தவர்களின் கருத்துக்களையே ப்ரமாணம் என்று கூறக்கூடும்; ஆனால் இப்படிப்பட்ட வாதமும் ஆத்மாவானது சாக்ஷியாய் இருந்த நிலையைக்கொண்டு விசேஷமான அனுபவங்களை மட்டுமே காண்பதால் நிராகரிக்கப்படுகிறது. எப்படி? இதம் அஹம் அதர்சம் – நான் இதனைப் பார்த்தேன் - என்று குறிப்பிட்ட பொருளுக்கு, குறிப்பிட்ட விசேஷம் உள்ளதாக உரைப்பதையே நாம் அனைத்து அனுபவங்களிலும் காண்கிறோம் அல்லவோ? அனுபவம் என்பது பேதங்களுடன் கூடியுள்ளதாக உள்ளபோதிலும், ஏதோ ஒரு குறிப்பிட்ட தவறான எண்ணத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற காரணத்தினால், அந்த அனுபவம் என்பது பேதங்களுடன் கூடியதாக இல்லை என்று மறுக்கப்படவேண்டும் என வைத்துக்கொள்வோம்; இப்படி நிரூபிக்க வேண்டுமானாலும், ஸத் என்ற இருப்பை வெளிப்படுத்தும் தன்மையைக் காட்டிலும் வேறாக உள்ள தன்மைகள் அல்லது காரணங்களால் மட்டுமே நிரூபிக்கமுடியும் (அதாவது ஸத் என்பது விசேஷமான தன்மை கொண்டது அல்ல என்பதை வேறு ஒரு காரணம் மூலம் நிரூபிக்கவேண்டும்). இத்தகைய தன்மைகள் மூலமாகவும் அனுபவம் என்பது பேதங்களுடன் கூடியதாகவே (ஸவிசேஷம்) உள்ளது என்றாகிறது.

மஹாபூர்வபக்ஷம் ஸம்பூர்ணம்
தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 94)

## ஸர்வேச்வரனின் திருக்கல்யாண குணங்கள் பற்றிய ஐயங்களும் விடைகளும்

**மூலம் –** அதில் முற்பட ஸித்தோபாயத்தைப் பற்றவரும் கலக்கங்களும், அவற்றின் பரிஹாரங்களும் சொல்கிறோம்.

**விளக்கம் –** முதலில் நாம் ஸித்தோபாயமான ஸர்வேச்வரனைப் பற்றியும், அவனது குணங்கள் பற்றியும் உண்டாகின்ற ஐயம் அல்லது தவறான எண்ணங்களைப் பட்டியலிட்டு, அந்தச் சந்தேகங்களை நீக்குவோம்.

## ப்ரபத்தி அவசியம் அற்றது என்ற வாதத்திற்கான பதில்

**மூலம் –** அநாதிகாலம் அநாதரித்த ஈசுவரன் இன்று ஒருத்தனை ஆதரிக்கிறது தன் ஸ்வாதந்த்ர்ய மாத்ரத்தாலேயன்றோ? இங்ஙனன்றாகில், “இன்று என்னைப் பொருளாக்கி தன்னை என்னுள் வைத்தான், அன்று என்னைப் புறம் போகப்புணர்த்தது என் செய்வான்” என்று ஆழ்வார் விண்ணப்பஞ் செய்ய, ஸர்வேச்வரன் “சூழ்விசும்பணிமுகில் தூரியம் முழக்கின” விதொழிய வேறோர் உத்தரம் அருளிச்செய்தானோ? ஆகையால் நாம் ஒரு உபாயாநுஷ்டாநம் பண்ணுகை என்னென்பது? “நடுவே வந்து உய்யக்கொள்கின்ற நாதன்” என்கிறபடியே அருள் புரிந்த சிந்தையடியார்மேல் வைத்து அவன் தானே ரக்ஷித்தபோது காணுமத்தனையன்றோ – என்று சிலர் கலங்குவார்கள்.

**விளக்கம் –** எல்லையற்ற காலம் ஒருவனைத் தள்ளியே வைத்திருந்த ஸர்வேச்வரன் இன்று தன்னுடன் சேர்த்துக் கொள்கிறான் என்றால் அதற்குக் காரணம் ஸர்வேச்வரனின் சுதந்திரமே ஆகும். இவ்விதம் கொள்ளாமல், அந்தச் செயலுக்குக்

காரணம் சேதனனின் முயற்சியே என்று கூறினால்: திருவாய்மொழியில் (10-8-9) - இன்று என்னைப் பொருளாக்கி தன்னை என்னுள் வைத்தான், அன்று என்னைப் புறம் போகப்புணர்த்தது என் செய்வான் – ஸர்வேச்வரன் என்னை ஒரு பொருளாக்கி தன்னுடன் சேர்த்துக் கொள்ளும்விதமாக என்னில் தன்னை வைத்துக்கொண்டான்; ஆனால் இதற்கு முன்னர் என்னை ஏன் அவனைக் காட்டிலும் வேறான விஷயங்களில் ஈடுபடும்படிச் செய்தான் – என்று ஆழ்வார் வினவினார்; இதற்கு ஈச்வரன், திருவாய்மொழி (10-9-1) - சூழ்விசும்பணிமுகில் தூரியம் முழக்கின – ஆகாயத்தில் அழகான மேகங்கள் இனிய வாத்திய ஓசையை எழுப்பின – என்று கூறுவதற்கு ஏற்ப எந்தப் பதிலையும் அளிக்கவில்லை – என்பதற்கு எப்படி விடை அளிக்கமுடியும்? ஆகவே அவனது பாதுகாப்பை நாடும் பொருட்டு நாம் ஏதேனும் ஓர் உபாயத்தைக் கைக்கொள்வது எதற்காக (அது வீணே ஆகும்)? திருவாய்மொழி (1-7-5) - நடுவே வந்து உய்யக்கொள்கின்ற நாதன் – எந்தக் காரணமும் இன்றி என்னைப் பிழைக்கும்படிச் செய்பவன் – என்று கூறுவதற்கு ஏற்ப, அவனது கருணையானது எப்போது ஒருவன் மீது விழுகிறதோ அப்போது தானாகவே வந்து ரக்ஷிப்பான் – என்று சிலர் கூறுவார்கள்.

**மூலம்** – இவர்களைத் தெளிவிக்கும்படி – ஈச்வரன் ஸ்வதந்த்ரனேயாகிலும் வைஷம்ய நைர்க்ருண்யங்களாகிற தோஷங்கள் தனக்குத் தட்டாமைக்காக இவன் பக்கலிலே ஒரு வ்யாஜத்தை உண்டாக்கி, அத்தை அவலம்பித்துத்தான் ரக்ஷிக்கும். இவ்வர்த்தத்தை, “திருமாலிருஞ்சோலைமலை என்றேன் என்னத் திருமால் வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான்” என்று ஆழ்வார் தாமே அருளிச்செய்தார். இந்த வ்யாஜம்தானும் ஈச்வரன் தன்னாலேயாகில், இத்தை முன்பே உண்டாக்காதே விட்டதென்னென்னில், இவ்வாத்மாக்களுக்கு அநாதியான கர்மப்ரவாஹங்கள் விஷம விபாக ஸமயங்களாய்க் கொண்டு போருகையாலே ஈச்வரன் கர்மாநுரூப பலப்ரதனல்லாதபோது வைஷம்யதோஷம் வருகையாலே முன்பு இதுக்கு அவஸரமாயிற்றில்லை என்னுமிடம் கார்ய விசேஷதர்சநத்தாலே கல்பிதம். இங்ஙனிசையாதபோது ஸர்வஸித்தாந்திகளுக்கும் “இதுக்கு முன்பில்லாத மோக்ஷச்ரத்தாதிகள் இப்போது பிறக்கைக்கு அடியென்?” என்றால், உத்தரம் சொல்ல விரகில்லை. அநாதி கர்மப்ரவாஹ வைசித்ரயத்தாலே என்னும் உத்தரம் ஈச்வரனை இசைந்தார்க்கும் இசையாதார்க்கும் துல்யம். ஈச்வர ஸ்வாதந்த்ர்யம் ஒரு வ்யாஜத்தைக் கொண்டு அவன் நினைத்தபோதே ரக்ஷிக்கைக்கும் விலக்கவல்லாரில்லைமைக்கும் உறுப்பாம்.

**விளக்கம்** – இவ்விதம் எண்ணுபவர்களை நாம் கீழே உள்ளபடி தெளிவாக்குவோம். ஈச்வரன் சுதந்திரமானவன் (தனது விருப்பத்தின்படி செயலாற்றுபவன்) என்றாலும், ”ஈச்வரன் ஒரு சேதனனிடம் பாரபக்ஷமாக நடந்துகொள்கிறான் (வைஷம்ய), இரக்கம் இன்றி நடந்துகொள்கிறான் (நைர்குண்யம்)” முதலான அவப்பெயர்கள்

தனக்கு வராமல் இருக்கவேண்டும் என்று எண்ணுகிறான். ஆகவே தான் யாரைக் காப்பாற்றவேண்டும் என்று எண்ணுகிறானோ அந்தச் சேதனன், தன்னுடைய காப்பாற்றுதலை பெறும் விதமாக, ஏதேனும் ஒரு செயலைச் செய்யவேண்டும் என்றாக்குகிறான். அந்தச் செயலை முன்னிட்டு அவனைக் காப்பாற்றுகிறான் (அப்போது மேலே கூறப்பட்ட அவப்பெயர்கள் வராது அல்லவோ). இவ்விதம் ஈச்வரன் செய்கிறான் என்பதை ஆழ்வார் திருவாய்மொழியில் (10-8-1) - திருமாலிருஞ்சோலைமலை என்றேன் என்னத் திருமால் வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான் – திருமாலிருஞ்சோலை என்று அவனது இருப்பிடத்தின் பெயரை மட்டுமே உச்சரித்தேன்; அதனையே காரணமாக்கி எனது மனதின் அவன் வந்து நின்றுவிட்டான் – என்றார். இதற்கு சிலர், "சரி – இவ்விதம் ஏதோ காரணம் காண்பிக்கவேண்டும் என்பதால் சேதனனை ஒரு செயலைச் செய்யும்படி ஈச்வரன் செய்கிறான் என்றால், அதனை ஏன் அவன் முன்பே செய்யவில்லை?", என்று கேட்கலாம். இதற்கு பதில் அளிப்போம். ஆத்மாக்களுக்கு எல்லையற்ற காலமாக கர்மங்களும், அவற்றின் பயன்களும் தொடர்ந்தபடி உள்ளன. இப்படி வெள்ளம் போன்று தொடரும் கர்மங்களானவை தங்களது பலன்களை பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு விதமாக அளிப்பவையாக உள்ளன. இப்படிப்பட்ட கர்மபலன்களின் அடிப்படையில் ஈச்வரன் தனது கருணையை ஒரு சேதனன் மீது பொழியவேண்டும். அவ்விதம் செய்யவில்லை என்றால் "ஈச்வரன் பாரபக்ஷமாக உள்ளான்" என்னும் அவப்பெயர் அவனுக்கு உண்டாகிவிடும். ஆகவே கர்மபலனின் காரணமாகத் தகுந்த நேரம் வராதவரையில், தான் யாரைக் காக்கவிரும்புகிறானோ அந்தச் சேதனனை, காப்பாற்றுவதற்குரிய செய்கைகளைச் செய்யத் தூண்டுவதில்லை. இதனால் மேலே கேட்கப்பட்ட கேள்விக்கு விடை அளித்தாயிற்று. இந்தப் பதிலை ஏற்கவில்லை என்றால், "ஏன் ஒருவனுக்கு ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மட்டுமே, அதற்கு முன்பு எழாத மோக்ஷ ஆசை உண்டாகிறது?" என்ற கேள்விக்கான பதிலை எந்த மதத்தைச் சேர்ந்த ஸித்தாந்தவாதிகளும் உரைக்க இயலாது. இத்தகைய ஆசைக்குக் காரணம் முன்பு செய்த கர்மங்களின் பலன்களே என்பதை ஈச்வரனை ஒப்புக் கொள்ளும் மதத்தினரும், ஒப்புக் கொள்ளாத மதத்தினரும் நிச்சயம் ஏற்பர். ஆக ஸர்வேச்வரனின் சுதந்திரமான தன்மை என்பது சேதனனிடம் உள்ள ஏதோ ஒரு காரணத்தை மட்டுமே சாக்காகக் ரக்ஷிப்பதற்கும், அவ்விதம் ரக்ஷிக்கும்போது தடுப்பதற்கு யாரும் இல்லாதபடி செய்வதற்கும் ஒரு காரணமாகிறது.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 50)

147. நெடுநாள் அந்யபரையாய்ப் போந்த பார்யை லஜ்ஜாபயங்களின்றிக்கே பர்த்ருஸகாரத்தாலே நின்று என்னை யங்கீகரிக்கவேணுமென்று அபேக்ஷிக்குமாபோலே யிருப்பதொன்றிதிறேயிவன் பண்ணும் ப்ரபத்தி.

**அவதாரிகை** - இவன் பண்ணும் ப்ரபத்தி, ஸ்வபூர்வ வ்ருத்தத்தை யநுஸந்தித்தால் அபாராதகோடிலேயா யிருக்குமென்னுமத்தை த்ருஷ்டாந்தமுகேந தர்சிப்பிக்கிறார் மேல் (நெடுநாள்) என்று தொடங்கி.

**விளக்கம்** - ஒருவன் தன்னுடைய முந்தைய செயல்களை எண்ணிப் பார்த்தான் என்றால், அவன் செய்கின்ற ப்ரபத்தி என்பது அபராதங்களின் எல்லையாகவே இருப்பதை உணரலாம் என்பதை ஓர் உதாரணம் மூலம் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, நெடுங்காலம் பர்த்தாவோடு ஒட்டற்று பரபுருஷகாமிநியாய் தந்நிக்ரஹ பாத்ரமாய்ப் போந்தாளொருபார்யை, “இப்படிப்பட்டநாமவன் ஸந்நிதியிலே கூசாமல் சென்று நிற்கும்படியென்” என்கிற லஜ்ஜையும், “இத்தனை காலமும் நாம் செய்து திரிந்ததெல்லாம் கண்டிருக்கிறவன், இப்போது நம்மைவந்திப்படியபேக்ஷிப்பதே! என்று தண்டிக்கில் செய்வதென்!” என்னும் பயமுமின்றிக்கே, அவன் முன்னே சென்று நின்று என்னையங்கீகரிக்கவேணும் என்றபேக்ஷிக்குமளவில் எத்தனையபராதமுண்டு; அப்படியே யிருப்பதொன்றிறே, பகவதநந்யார்ஹனாய் வைத்து அநாதிகாலம் அவனுடன் பற்றின்றிக்கே அந்யபரனாய்ப்போந்தவிவன், ஸ்வபூர்வ வ்ருத்தாந்தாநுஸந்தாநத்தால் வரும் லஜ்ஜையும் ஸ்வதந்த்ரனானவவன் தண்டிக்கில் செய்வதென் என்னும் பயமுமின்றிக்கே, தத்ஸந்நிதியிலே சென்று நின்று தன்னை

யங்கீகரிக்கவேணுமென்று பண்ணுகிற சரண வரண மென்கை. ஆக இவ்வளவும், ஸ்வகத ஸ்வீகாராநுபாயத்வமும், பரகத ஸ்வீகாரோபாயத்வமும் ப்ரதிபாதிக்கப்பட்டது.

**விளக்கம்** – பல காலமாகத் தனது கணவனுடன் எந்தவிதமான தொடர்பும் இல்லாமல், மற்ற ஆண்மகன் ஒருவனை நாடி அவனை அடைந்த மனைவி ஒருவள், மீண்டும் தனது கணவனை அடைந்தால் தண்டிக்கப்படுவோம் என்ற நிலையில் உள்ளாள். அவள் தனது கணவன் முன்பாகச் சென்று, "இப்படிப்பட்ட நான் எனது கணவன் முன்பு எந்த முகத்துடன் விழிப்பேன்", என்று எண்ணிச் சிறிதும் வெட்கம் அடையாமலும்; "இத்தனை காலம் தவறான செய்கைகளுடன் நான் திரிந்து வந்ததை இவன் பார்த்திருப்பான். இப்படிப்பட்ட இவள் மீண்டும் நம்மை நாடி வந்து விரும்புவது எப்படி என்று எண்ணி என்னைத் தண்டித்தால் என்ன செய்வது?" என்று எண்ணி அச்சம் கொள்ளாமலும், அவன் முன்பாகச்சென்று, "என்னை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று கேட்பது போல் - என்கிறார். இத்தகைய செய்கை எத்தனை அபராதங்களுடன் கூடியது! இத்தகைய அபராதங்கள் போன்றே - ஸர்வேச்வரனுக்கே உரியவனாக உள்ள நாம், எல்லையற்ற காலம் அவன் மீது எந்தவிதமான பற்றுதலும் இன்றி, வேறு எண்ணங்களுடன் திரிகிறோம். நம்முடைய முந்தைய செயல்களால் எந்தவிதமான நாணமும் கொள்வதில்லை. சுதந்திரமானவனாகிய ஸர்வேஸ்வரன் தண்டித்தால் என்ன செய்வது என்ற அச்சமும் இல்லை. அவன் முன்பாக நின்று நம்மை ஏற்கவேண்டும் - என்று ப்ரபத்தி செய்யும் செய்கை உள்ளது.

இப்படியாக நாமாகவே சென்று ஸர்வேச்வரனிடம் ப்ரபத்தி செய்வதன் ஆகாத தன்மை மற்றும் அவனாகவே வந்து நம்மை ஏற்றுக்கொள்வதன் ஏற்புடைய தன்மை என்பது உணர்த்தப்பட்டது.

148. க்ருபையாலே வரும் பாரதந்த்ர்யத்திற்காட்டில் ஸ்வாதந்த்ர்யத்தாலே வரும் பாரதந்த்ர்யம் ப்ரபலம்.

**அவதாரிகை** - இனி, இவன் ஸ்வீகாரங்கண்டிரங்கி யவனிவனுக்கு பரதந்த்ரனாவதிலும் தன் ஸ்வாதந்த்ர்யத்தால் வந்து பரதந்த்ரனாவதே ப்ரபலமென்கிறார் (க்ருபையாலே) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஸர்வேச்வரன் சேதனனின் ப்ரபத்தியைக் கண்டு இரக்கம் கொண்டு, தனது க்ருபை காரணமாக அந்தச் சேதனனுக்கு வசப்படுவதைக் காட்டிலும், தன்னுடைய சுதந்திரம் காரணமாக தானாகவே வலியச் சென்று சேதனனுக்கு வசப்படுதலே சிறந்தது என்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, ஆர்த்தராய் அநந்ய சரண்யராய் தன் திருவடிகளிலே வந்து சரணம் புகுந்தவர்களளவில் தனக்குண்டான க்ருபையாலே அவர்கள் சொன்னதே செய்யும்படி பரதந்த்ரனாகையும், பட்டத்துக்குரியவானையுமரசும் போலே தன்நிரங்குச ஸ்வாதந்த்ர்யத்தாலே நிர்ஹேதுகமாகச் சிலரை யங்கீகரீத்துத் தன்னையவர்களிட்டது வழக்காக்கி வைக்கையும், இரண்டுமீச்வரனுக் குள்ளதொன்று; இதில் முற்பட்டது, ஓரோதசைகளிலே ஸ்வாதந்த்ர்ய நிருத்தமாய் விபலிக்கவுங் கூடும்; பிற்பட்டது, அப்ரதிஹதமாகையாலே ஒருக்காலும் கண்ணழிவில்லை. ஆகையாலே அதிலுங் காட்டிலிது ப்ரபலமென்கை.

**விளக்கம்** – மிகுந்த துன்பம் அடைந்தவர்களாக, தன்னைத் தவிர வேறு புகலிடம் இல்லை என்று தன்னை அடைந்தவர்களாக, தனது திருவடியில் சரணம் புகுந்தவர்களிடம் ஸர்வேச்வரன் மிகுந்த இரக்கம் கொள்கிறான். இதனால் தனது க்ருபை காரணமாக உண்டான பாரதந்த்ர்யமாகும். மாறாக, எந்தவிதமான காரணமும் இன்றி ஒரு சிலரை ஸர்வேச்வரன் அங்கீகாரம் செய்கிறான்; அதன் பின்னர், தான் அவர்கள் சொற்படிக் கேட்டு நடக்கிறான். இது ஸ்வாதந்த்ர்யம் காரணமாக உண்டான பாரதந்த்ர்யமாகும். இந்த இரண்டு தன்மைகளுமே ஸர்வேச்வரனுக்கு உள்ளது. இந்த இரண்டில் முதலில் கூறப்பட்டதான "க்ருபை காரணமாக உண்டான பாரதந்த்ர்யம்" என்பது ஒரு சில நேரங்களில் ஸர்வேச்வரனின் ஸ்வாதந்த்ர்யம் காரணமாகத் தடைப்பட்டு, பலன் அளிக்காமல் போய்விடக்கூடும். ஆனால் இரண்டாவதாகக் கூறப்பட்ட "ஸ்வாதந்த்ர்யம் காரணமாக ஏற்பட்ட பாரதந்த்ர்யம்" என்பது எந்தவிதமான தடையும் இல்லாதது என்பதால், பலன் உண்டாக எந்த இடையூறும் இல்லை. எனவே முந்தையதைக் காட்டிலும் பிந்தையது ஏற்றமானது என்று கருத்து.

149. இவ்வர்த்தத்தை வேதபுருஷனபேக்ஷித்தான்.

**அவதாரிகை** - இவ்வர்த்தந்தான் வேதாபிமதமென்கிறார் மேல் (இவ்வர்த்தத்தை) என்று தொடங்கி.

**விளக்கம்** - "ஸ்வாதந்த்ர்யம் காரணமாக ஏற்பட்ட பாரதந்த்ர்யம்" என்பது எந்தவிதமான தடையும் இல்லாதது என்னும் கருத்தானது, வேதங்களாலும் விரும்பப்படும் கருத்து என்று அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – (இவ்வர்த்தம்) என்கிறது கீழ் ப்ரபலமாகச் சொல்லப்பட்ட பரகதஸ்வீகாரத்தை. (வேத புருஷனித்தை யபேக்ஷித்தான்) என்றது "நாயமாத்மா ப்ரவசநேந லப்ய: நமேதயா நபஹுநா ச்ருதேந, யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" என்று கடவல்லியிலும் முண்டகோபநிஷத்திலும் சொல்லுகையாலே யாதரித்தானென்கை. அஸக்ருத் கீர்த்தந மபேக்ஷா கார்யமிறே.

**விளக்கம்** – "இவ்வர்த்தம்" என்பதன் மூலம் கடந்த சூர்ணையில் கூறப்பட்ட "ஸ்வாதந்த்ர்யம் காரணமான பாரதந்த்ர்யம்" என்பது உணர்த்தப்பட்டது. "வேத புருஷனித்தை யபேக்ஷித்தான்" என்பதன் மூலம் கூறப்படுவது என்ன? கடவல்லியும் (2-43), முண்டக உபநிஷத்தும் (3-2-37) – நாயமாத்மா ப்ரவசநேந லப்ய: நமேதயா நபஹுநா ச்ருதேந, யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் - ஸர்வேச்வரன் மனனம் காரணமாகவோ, பக்தி வடிவமான உபாசனம் காரணமாகவோ, பலவகையான கேள்விகள் மூலமாகவோ அடையப்படுபவன் அல்லன்; ஸர்வேச்வரன் யார் ஒருவனை விரும்பி ஏற்கிறானோ அந்த ஒருவனால் மட்டுமே அடையப்படுபவன்; அந்தச் சேதனனுக்கே ஸர்வேச்வரன் தனது ஸ்வரூபம் உள்ளிட்ட அனைத்தையும் உணர்த்துகிறான் - என்றது காண்க. ஆகவே வேதபுருஷன் இதே கருத்தை ஏற்றான் என்றாகிறது. பலமுறை "ஏற்கிறான்" என்று கூறப்படுவதன் காரணம் விருப்பத்தால் ஆகும்.

150. அபேக்ஷா நிரபேக்ஷமாகத் திருவடிக்கும் ஸ்ரீகுஹப்பெருமாளுக்கும் இது உண்டாயிற்று.

**அவதாரிகை** - இத்தலையிலபேக்ஷையின்றிக்கேயிருக்க இவ்விஷயீகாரம் ஸித்திக்கப் பெற்றவர்களுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (அபேக்ஷாநிரபேக்ஷமாக) என்று தொடங்கி.

**விளக்கம்** – ஸர்வேச்வரனிடம் தானாகவே வராமல், இப்படிப்பட்ட "ஸ்வாதந்த்ர்யம் காரணமான பாரதந்த்ர்யம்" என்பது கைகூடப்பெற்றவர்கள் யாரேனும் உண்டா என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, தந்தாம்பக்கல் அபேக்ஷையின்றிக்கேயிருக்கச்செய்தே, பம்பா தீரத்திலும் கங்காகூலத்திலும் பெருமாள் தாமே சென்றங்கீகரிக்கப் பெற்ற திருவடிக்கும் ஸ்ரீகுஹப்பெருமாளுக்கும் இந்த பரகதஸ்வீகாரா முண்டாய்த்தென்கை.

**விளக்கம்** - தன்னிடம் விருப்பம் இல்லாமல் உள்ளபோதிலும், பம்பை நதியின் கரையிலும், கங்கையின் கரையிலும் இராமன் தானாகவே சென்று ஏற்றுக்கொண்ட அனுமன் மற்றும் குஹன் ஆகிய இருவருக்கும் இந்தப் பரகதஸ்வீகாரம் (ஸ்வாதந்த்ர்யம் காரணமான பாரதந்த்ர்யம்) உண்டானது.

151. இவன் முன்னிடுமவர்களை அவன் முன்னிடுமென்னுமிடம் அபயப்ரதாநத்திலும் காணலாம்.

**அவதாரிகை** – இப்படி ஸ்வதந்த்ரனாயிவர்களை யங்கீகரிக்கிற விடத்திலும், "தமப்யபாஷ ஸௌமித்ரே ஸுக்ரீவ ஸசிவம் கபிம்", "மாழைமான் மடநோக்கி யுன் தோழியும்பி யெம்பி" என்று இளையபெருமாளையும் பிராட்டியையும் முன்னிட்டாப்போலே மற்றும் புருஷகாரத்தை முன்னிட்டு அங்கீகரித்தவிடம் காணலாமோவென்ன வருளிச்செய்கிறார் (இவன்) என்று தொடங்கி.

**விளக்கம்** – இப்படியாக அனுமனையும், குகனையும் எம்பெருமான் ஏற்று அங்கீகரித்த நேரங்களில் பின்வரும் வரிகளில் உள்ளது போன்று லக்ஷ்மணனையும், சீதையையும் புருஷகாரமாக முன்னிட்டே ஏற்றான்:

- இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (3-27) – தமப்யபாஷ ஸௌமித்ரே ஸுக்ரீவ ஸசிவம் கபிம் - லக்ஷ்மணா! சுக்ரீவனுடைய மந்திரியாகவும், பேசுவதில் வல்லவனும் ஆகிய அனுமன், இனிய சொற்களுடன் நம்முடன் எப்போதும் கூடியிருக்கும்படியாக நீ பேசுவாயாக.

- பெரியதிருமொழி (5-8-1) - மாழைமான் மடநோக்கி யுன் தோழியும்பி யெம்பி

மேலே உள்ள வரிகள் போன்று மற்ற புருஷகாரங்களை முன்னிட்டு எம்பெருமான் யாரையேனும் ஏற்றுக் கொண்ட நிகழ்வுகள் உள்ளனவா என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார்.

**வ்யாக்யானம் –** அதாவது, இச்சேதநன் தான் ஆச்ரயிக்கிறபோது புருஷகாரமாக முன்னிடுமவர்களை, அவனு மங்கீகரிக்குபோதும் முன்னிடுமென்னுமிடம், திருவடியையும் ஸ்ரீகுஹப்பெருமாளையும் அங்கீகரித்த ஸ்தலங்கள் மாத்ரமன்றிக்கே, ஸ்ரீவிபீஷணாழ்வானை யங்கீகரித்த ஸ்தலத்திலும் காணலாமென்கை. எங்ஙனே யென்னில்? "ஸோஹம்பருஷிதஸ்தேந தாஸவச் சாவமாநித: த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம்கத:" என்று சரணம் புகுந்து, "ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம்" என்று நின்ற விபீஷணாழ்வானை அபயப்ரதாநபூர்வகமாக அங்கீகரிக்கிறவிடத்தில், "ஆநயைநம் ஸ்வயம்" என்று முதலிகளுக்கெல்லாம் மூலபூதரான மஹாராஜரை முன்னிட்டிறே அங்கீகரித்தது. திருவடியையும் ஸ்ரீவிபீஷணாழ்வானையுமங்கீகரிக்கிறவிடத்தில் பிராட்டி ஸந்நிஹிதையல்லாமையாலே யவளை முன்னிட்டமை தோற்றிற்றில்லையேயாகிலும், பிராட்டி லங்கைக்கெழுந்தருளுகிறபோது மஹாராஜரும் திருவடியும் நிற்கிறவிடத்திலே, திருவாபரணங்களைப் பொகட்டு கடாக்ஷித்து வைத்துப்போகையாலும், லங்கையிலே எழுந்தருளினபின்பு ஸ்ரீவிபீஷணாழ்வானைப் பெருமாள் திருவடிகளிலே வரும்படி கடாக்ஷித்தருளுகையாலும், பெருமாளிருவரையு மங்கீகரிக்குமிடத்தில் பிராட்டியை முன்னிட்டே யங்கீகரித்தாரென்று கொள்ளவேண்டும். பரதந்த்ரையான வளுக்கு இத்தலையில் நினை வொழியத் தனித்தொரு ப்ரவ்ருத்தி கூடாதிறே;

ஆகையாலேயிறே, பரகத ஸ்வீகாரம் சொல்லுகிறவிடத்திலே ஸ்ரீவிபீஷணாழ்வானை யங்கீகரித்த தத்தையுமிவர் ஸஹபடித்தது.

**விளக்கம்** - எம்பெருமானை சேதனன் பற்றும்போது யாரைப் புருஷகாரமாகக்கொண்டு பற்றுகிறானோ அதே போன்று ஸர்வேச்வரனும் அவர்களை முன்னிட்டுக் கொண்டே ஏற்கிறான் என்ற நிகழ்வானது அனுமனையும் குகனையும் ஏற்ற இடம் தவிர, விபீஷணனை ஏற்றபோதிலும் காணலாம் எப்படி? இராமாயணம் யுத்தகாண்டம் (17-16) – ஸோஹம்பருஷிதஸ்தேந தாஸவச் சாவமாநித: த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம்கத: - நான் இராவணனுக்கு நன்மையை மட்டுமே உபதேசம் செய்தேன்; ஆனால் அவனால் துன்பமான சொற்கள் உரைக்கப்பெற்றேன்; வேலையாட்களைக் காட்டிலும் தாழ்வாக நடத்தப்பட்டேன்; எனது புத்திரர்களையும் மனைவியையும் விட்ட நான் இராகவனைச் சரணம் புகுந்தேன் – என்று சரணம் அடைத்தான். அப்போது இராமாயணம் யுத்தகாண்டம் (17-13) - ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம் - அனைத்து உயிர்களும் சரணம் புகுவதற்கு ஏற்றவனும், மிகவும் உயர்ந்தவனும் ஆகிய இராகவனிடம் சென்று எனது பெயரான விபீஷணன் என்பதை உடனே தெரிவிப்பீர்களாக - என்று கூறினான். அப்போது அந்த விபீஷணனை இராமாயணம் யுத்தகாண்டம் (18-34) – ஆநயைநம் ஸ்வயம் - வானரர்களின் தலைவனாகிய சுக்ரீவா! அவனை அழைத்து வருவாயாக; அவனுக்கு என்னால் அபயம் அளிக்கப்பட்டது; விபீஷணனாக இருந்தாலும், இராவணனாக இருந்தாலும் அழைத்து வா - என்று அழைத்து வரக் கூறி, அனைத்திற்கும் முதல்வனான சுக்ரீவன் முன்னிட்டே அபயம் அளித்தான். அனுமனையும், விபீஷணனையும் ஏற்றுக்கொண்ட இடத்தில் அங்கு புருஷகாரமாகப் பெரியபிராட்டி இல்லையே, ஆக அவளை முன்னிட்டுச் சரணாகதி நடைபெற்றதாக வெளிப்படவில்லையே என்று கேள்வி எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். அங்கு பெரியபிராட்டி இல்லை என்றபோதிலும் சுக்ரீவனும், அனுமனும் நின்ற இடத்தில், இராவணனால் தான் அபகரித்துச் செல்லப்பட்டபோது, மேலிருந்து தனது திருவாபரணங்களை அங்கு விழும்படியாகச் செய்து அனுமனைக் கடாக்ஷித்தாள். விபீஷணனின் மனைவியாகிய சரமை என்பவள் சீதையுடன் நட்புடன் இருந்த காரணத்தினால் அவள் மூலமாக விபீஷணன் இராமனின் திருவடிகளை அடையும்படி கடாக்ஷித்தாள் (அல்லது விபீஷணனின் மகளாகிய த்ரிஜடை என்பவள் மூலம்

கடாக்ஷித்தாள் என்றும் கொள்ளலாம்). ஆகவே இந்த இருவரையும் பெரியபிராட்டியை முன்னிட்டே இராமன் ஏற்றான் என்றாகிறது. எம்பெருமானுக்கு வசப்பட்டவளான பிராட்டிக்கு, அவனது நினைவுகள் நீங்கலாக வேறு எந்தச் செய்கையும் இருத்தல் பொருந்தாது. ஆகவேதான் பரகத ஸ்வீகாரம் குறித்துக் கூறும்போது, விபீஷணனை இராமன் ஏற்றதைப் பற்றிக் கூறினார்.

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.......தொடரும்

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 60)

1-4-5 நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும் வினையேற்கே
நல்கத்தா னாகாதோ நாரணனைக் கண்டக்கால்
மல்குநீர்ப் புனற்படப்பை யிரைதேர்வண் சிறுகுருகே
மல்குநீர்க் கண்ணேற்கோர் வாசகங்கொண் டருளாயே.

**பொருள் -** மிகுதியான தண்ணீரை உடைய தோட்டங்களில் உங்களுக்கு இரையாக உள்ள சிறிய மீன்களைத் தேடுகின்ற குருகே! ஏழு உலகங்களையும் தான் விரும்பியவனாக, அந்த உலகங்களுக்கு விருப்பம் அல்லாதவற்றை தானே நீக்கியவனாக நின்று காப்பாற்றும் ஶ்ரீமந்நாராயணனை நீங்கள் காண நேர்ந்தால், “எனக்குத் திருவருள் புரிந்தால் ஆகாதோ?”, என்று கேளுங்கள். அதற்கு அவன் உங்களிடம் உரைக்கின்ற மறுமொழியைக் கேட்டு வந்து, மிகுதியான கண்ணீரால் நிரம்பிய கண்களைக் கொண்ட என்னிடம் கூற வேண்டும்.

**அவதாரிகை -** எங்களை விடீர்; முடிவார்க்கு வேண்டாவிறே; ஜீவிக்க நினைத்திருக்கிற தமக்குத் தாம் வேண்டாவோ? என்கிறாள். தம்முடைய நாராயணத்வம் ஒறுவாய்ப் போகாமே நோக்கிக் கொள்ளச் சொல்லும் என்கிறாள்.

**விளக்கம் –** கடந்த பாசுரங்களில், “நான் முடிவதற்கு முன்பாக வந்து எனக்கு உதவவேண்டும்”, என்று பலமுறை விண்ணப்பம் செய்தாள். ஆயினும் அவன் வந்து தனது திருமுகத்தைக் காண்பிக்கவில்லை. உடனே இவள், ”என்னுடைய இருப்பு

என்பது இல்லாமல் போனால் போகட்டும். அவன் தன்னுடைய இருப்பை நிலைநாட்டிக் கொள்வதற்காகவாவது வரவேண்டாமா?” என்கிறாள். இதற்கு அந்தக் குருகுகள், “உன்னைக் காக்கவில்லை என்பதால் அவனது இருப்புக்குத் தாழ்ச்சி ஏற்படுமோ?”, என்று கேட்டன. இதற்கு விடை அளிக்கிறாள், “நாராயணன் என்ற பெயருக்கு ஏற்பவும், அவனது ‘அனைத்தையும் காப்பவன்’ என்ற பெயருக்கு ஏற்பவும் அவன் வரவேண்டும். இல்லையென்றால், அவனது ‘அனைத்தையும் காப்பவன்’ என்ற நிலைக்குக் குறைபாடு ஏற்பட்டுவிடும். ஆகவே இந்தக் குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும்படி உரைப்பீர்களாக”. என்கிறாள்.

**வ்யாக்யானம் -** (நல்கி) விபூதிரக்ஷணம் பண்ணும்போது, கர்த்தவ்யபுத்த்யாவின்றிக்கே பேறு தன்னதாகக்கிடீர் ரக்ஷிப்பது. எனக்குத் தன்பக்கல் உண்டான வ்யாமோஹம் தனக்கு விபூதியில் உண்டாயாயிற்று ரக்ஷிப்பது. (தான்) அபேக்ஷிப்பாரின்றிக்கேயிருக்கத் தானே ரக்ஷிக்குமவன். (பொழிலேழும்) கீழும் மேலும் ஒன்றாக நினைத்துச் சொல்லுகிறதாதல், ஸப்த த்வீபவதியான பூமியைச் சொல்லுகிறதாதல்; ஸ்வசரீர ரக்ஷணம் பண்ணுவது ஸ்நேஹபுரஸ்ஸரமாகவிறே. (நல்கித்தான் இத்யாதி) நாமரூப விபாகாநர்ஹமாய்க் கிடந்தவன்று ஆர் இருந்து அபேஷிக்க இத்தை உண்டாக்கிற்று? சக்த்யவஸ்தப்ரபை போல் தான் என்கிற சொல்லுக்குள்ளேயாய் தன்னையிட்டு வ்யவஹரிக்க வேண்டினவன்று தன்மேலே ஏறிட்டுக்கொண்டு நோக்கினானாயிற்று. (காத்தளிக்கும்) காத்துக்கொடுக்கும் என்னுதல்; நோக்கி ரக்ஷிக்கும் என்னுதல்.

**விளக்கம் –** “நல்கித்தான் காத்தளிக்கும்” என்பதை இருவிதமாகப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். “பொழில் ஏழையும் தான் நல்கிக்காத்தளிக்கும்” என்பது முதல் வகையாகும். இவ்விதம் கொண்டால், அனைத்தையும் தானாகவே விரும்பி, அவற்றுக்கு விருப்பம் அல்லாதவற்றை விலக்கிக் காப்பது என்பதாகும். “பொழிலேழும் காத்துத் தான் நல்கி அளிக்கும்” என்று பிரிப்பது இரண்டாம் வகையாகும். அதாவது, ப்ரளயகாலத்தில் இந்த ஏழு உலகங்களையும் பாதுகாத்து, ஸ்ருஷ்டியின்போது மீண்டும் அளித்தல் என்பதாகும். இப்படியாக அனைத்தையும் காப்பாற்றும் போது, “இவற்றைக் காப்பது நமது கடமை” என்று எண்ணாமல், “இவற்றைக் காப்பது நமது பேறு” என்று எண்ணியபடி அல்லவா காக்கிறான்? எனக்கு அவன் மீது உண்டான ப்ரேமை போன்று, அவனுக்கு உலகங்களின் மீது

ப்ரேமை உள்ளதால் காக்கிறான். (தான் ) – தன்னை விரும்புபவர்கள் என்று யாரும் இல்லை என்றாலும் தானாகவே வலிய வந்து காப்பாற்றுகிறான். (பொழிலேழும்) – பொழில் என்றால் லோகங்கள். தமிழ் நிகண்டில் - பொழிலே சோலையும் உலகமும் புகழ்வர் - என்றது காண்க. இதற்கு இரண்டு பொருள் உரைக்கலாம். இந்த உலகம், கீழ் உலகம் ஆகியவற்றை ஒன்றாகக் கொண்டு, மேலே உள்ளதான ஆறு உலகங்களுடன் சேர்த்து ஏழு உலகம் என்பது ஒரு பொருள். மேலே உள்ள ஆறு உலகங்கள் = புவர்லோகம், சுவர்லோகம், மகர்லோகம், ஜனலோகம், தபோலோகம் மற்றும் ஸத்ய லோகம் ஆகும். அல்லது பூமியும், கீழே உள்ள ஏழு பாதாள லோகங்களும் கூறப்பட்டன எனலாம். அல்லது பூமியின் ஏழு தீவுகளைக் கூறுவதாகவும் கொள்ளலாம். ஏழு தீவுகள் = ஜம்புத்வீபம் உள்ளிட்டவை. ஆகவே இவன் இந்தப் பூமியை காப்பது என்பது, ஒருவன் தனது சரீரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற ஆசை கொள்வது போன்று ஆகும். (நல்கித்தான் இத்யாதி) – நல்குதல் என்பது இங்கு கொடுத்தல் என்ற பொருளில் கொள்க. அதாவது ஸ்ருஷ்டியின் முன்பாக உருவம், பெயர் என்று பிரிக்க இயலாதபடி அனைத்தும் ஒன்றாகக் கிடந்தன. அப்போது இவ்விதமாக இவை அனைத்தையும் மீண்டும் படைக்கவேண்டும் என்று யார் இவனிடம் விரும்பிக் கேட்டதால் இவன் படைத்தான்? யாரும் கேட்கவில்லை, தானாகவே செய்தான் என்று கருத்து. நீறுபூத்த நெருப்பு போன்று "தான்" என்பதற்குள்ளே அனைத்தையும் வைத்து, தன்னை வைத்து பேச வேண்டி நின்ற அன்று, தானே அளிப்பவன். (காத்தளிக்கும்) - இங்கு "காத்து" என்பதற்கும், "அளிக்கும்" என்பதற்கும் ஒரே பொருள் தோன்றுவதால் "கூறியது கூறல்" என்ற புநருக்தி தோஷம் ஏற்படுமோ என்ற சந்தேகத்தை நீக்குகிறார். அனைத்துடன் ப்ரியமாகப் பழகுகின்ற காலத்தில் நமது விருப்பங்கள் தவிர மற்ற விருப்பம் அற்றவைகள் நிகழாமல் பார்த்துக்கொள்பவன் – இது "காத்து" என்பதாகும்; ஸ்ருஷ்டி காலத்தில் ஸம்ஹாரம் மற்றும் காப்பதைச் செய்பவன் – இது "அளிக்கும்" என்பதாகும். ஆக ப்ரளய காலத்தில் காப்பாற்றி, மீண்டும் அளிப்பான்; மற்ற காலங்களில் நம்மைப் பாதுகாத்து நிற்பான்.

**வ்யாக்யானம்** - (வினையேற்கே நல்கத்தானாகாதோ) இல்லாதவன்று உண்டாக்கினாய்; உண்டாக்கினதுக்குப் பலம் கர்மத்தை ஏறிட்டுக்கைவிடுகையோ? ஸ்வஜநரக்ஷணம் பண்ணலாகாதோ? நாட்டுக்கிட்ட நினைப்பு அந்த:புரத்துக்கு அரிதாக வேணுமோ? (வினையேற்கே) கடலிலே

ஏற்றமிட்டுத் தண்ணீர் அரிதாம்படியான பாபத்தைப் பண்ணுவேனே! (நாரணனைக் கண்டக்கால்) ஜீவஸமூஹத்தினுடைய ஸ்வரூப ஸ்தித்யாதிகள் ஸ்வாதீநமாய், இவை ப்ரகாரமாகத் தாம் ப்ரகாரியாய், இவற்றிலே ஒன்று குறையிலும் தம் இழவாம்படி இருக்கையாலே, நாராயணன் என்று விருதூதித் திரிகிறவரைக் கண்டால், "இப்போ யோகரூடியோ என்றிருந்தோம்; மஹாவ்ருக்ஷத்தோ பாதியோ?" என்று கேளுங்கோள். (மல்குநீர் இத்யாதி) உன் செயல் பரார்த்தமாய் இருந்ததீ! பெருகா நின்றுள்ள நீரை உடைத்தான நீர்நிலம் உண்டு - கொடித்தோட்டம்; அதிலே, (இரைதேர்) பேடையின் வாய்க்கு அடங்குவது தேடாநின்றது. "புள்ளுப் பிள்ளைக்கிரை தேடும்" என்னக்கடவதிறே. கயல் உகளாநிற்கச்செய்தேயிறே பிள்ளை வாய்க்கு அடங்குவது தேடுகிறது.

**விளக்கம்** - (வினையேற்கே நல்கத்தானாகாதோ) – ஏதும் இல்லாதபோது அனைத்தையும் உண்டாக்கினாய். அப்படி உண்டாக்கிய பின்னர் எங்களுக்குக் கிடைத்த பலன் என்பது, எங்களது கர்மவினைகள் அனைத்தையும் காரணமாகக் காட்டி எங்களை நீ கைவிடுவதுதான் போலும். உன்னுடைய மக்களை நீ காப்பாற்ற வேண்டாமா? அரசன் ஒருவன் பொதுவாக நாட்டிற்கு இட்ட சட்டமானது அந்தப்புரத்திலும் பொருந்தும் அல்லவோ? (வினையேற்கே) - கடலில் ஏற்றம் வைத்து இறைத்தபோதிலும் வேண்டிய நீர் கிட்டவில்லை எனபவனின் நிலை போன்று அனைத்தையும் காக்கவல்ல அவனைப் பெற இயலாதபடி, எத்தனை கழித்தாலும் தீராமல் எனது பாவங்கள் உள்ளனவே! (நாரணனைக் கண்டக்கால்) – அனைத்து உயிர்களின் ஸ்வரூபம், அவற்றின் இருப்பு போன்றவை தனது கட்டுப்பாட்டில் கொண்டவனாக; இவை ப்ரகாரமாகவும், தான் ப்ரகாரியாகவும் உள்ளவனாக; இவற்றில் ஏதேனும் சற்றே குறைந்தாலும், தனக்கு இழப்பு நேர்ந்தது என்று உள்ளவனாக; "நானே நாராயணன்" என்று தனது பெயரை கூறிக்கொண்டு செல்பவனை நீங்கள் எங்காவது காணும்போது, "உமக்கு நாராயணன் என்னும் திருநாமம் உமது செயல்களின் காரணமாக, அஸாதாரணமான திருநாமமோ என்று இத்தனை காலம் எண்ணி ஏமாந்தோம்; ஆனால் சுள்ளி ஒன்றுக்கு மஹாவ்ருக்ஷம் என்று பெயர் இருப்பது போன்றுதான் உமக்கும் இந்தத் திருநாமம் உள்ளது போலும்", என்று கூறுங்கள். (மல்குநீர் இத்யாதி) மிகுந்த நீரைக் கொண்டதான கொடித்தோட்டத்தில். (நிரைதேர்) – உனது பேடையின் வாயில் புகும் அளவிற்குச் சிறிதாக உள்ள மீன்களைத் தேடியபடி உள்ள குருகே! பெரியதிருமொழி (5-1-2) – புள்ளுப்பிள்ளைக்கிரை தேடும் - என்ற பாசுரம் இங்கு ஒப்பு நோக்குக. மீன்கள் பல தாவித்

திரிகின்றபோதிலும், தன்னுடைய சிறிய குருகின் வாயில் புகும் அளவிற்கு உள்ள மீனை மட்டுமே தேடுகிறது.

**வ்யாக்யானம் -** (வண் சிறுகுருகே) குருகு - வண்டானம்; கொய்யடிநாரை. வண்மை – அழகும் ஔதார்யமும். கைப்பட்ட இரை தன் மிடற்றுக்குக் கீழ் இழித்தாதாயிற்று. நான் உபவாஸக்ருசையாயிருக்க நினையாதிருக்கும் அவனைப்போலன்றே உன் ஔதார்யம். (சிறுகுறுகே) கார்யகாலத்தில் ப்ருஷதம்சகமாத்ரமாக வேண்டா. தூது போகைக்குச் சிரமம் செய்திருப்பாரைப்போலே இருந்தது உன் வடிவில் லாகவம். (மல்குநீர்க் கண்ணேற்கு) இதுவும் ஒரு நீர்நிலம் இருக்கிறபடி பாராய். இரைதேடுகிற இத்தைவிட்டு இத்தைப் பார்க்குமோ என்னில், பார்க்குமிறே; இங்கேயும் சேலும் கயலும் உண்டாகையாலே. (மல்குநீர்க்கண்ணேற்கு) தனக்கு நிரூபகம் கண்ணநீர்போலேகாணும். அதாவது - கலவியில் ஆநந்தாச்ரு, பிரிவில் சோகாச்ரு. (ஓர் வாசகங்கொண்டு) நேரே உடம்பைத் தரவேணும் என்று சொல்லமாட்டாளே, “மறுப்பரோ” என்னும் பயத்தாலே. மறுக்கும் வார்த்தையும் அமையும் இத்தலைக்கு; அவர்பக்கலுள்ளது ஒன்றாமத்தனையே வேண்டுவது; “தாரான் தரும் என்றிரண்டத்தில் ஒன்றதனை” என்றிறே மற்றும் பிராட்டிமார் பாசுரம். “மெய்ம்மை சொல்லி முகம்நோக்கி விடைதான் திருமேல் மிகநன்று” என்றும், “பாவி நீ என்றொன்று சொல்லாய்” என்றுமிறே இருப்பது. (அருளாயே) அவை திர்யக்குக்களாகவுமாம், தான் ஜநககுல ஸுந்தரியாகவுமாம், உபகரிகிறது பகவத் விஷயமானால் இங்ஙனல்லது சொல்லவொண்ணாது. “நம்பி ஏறுதிருவுடையான் தாஸர் திருநாட்டுக்கு நடந்தார்” என்று பட்டர்க்கு விண்ணப்பஞ்செய்ய, துணுக்கென்று எழுந்திருந்து, “அவர் ஸ்ரீவைஷ்ணவர்களுடன் பரிமாறும்படிக்கு, திருநாட்டுக்கு எழுந்தருளினார் என்னவேணுங்காண்” என்று அருளிச்செய்தார்.

**விளக்கம் -** (வண் சிறுகுருகே) – வண்மை என்றால் அழகு மற்றும் தாராள மனப்பான்மை என்று இரு பொருள் உண்டு. இதற்கு வண்மை உள்ளதாக ஏன் கூறவேண்டும்? தன்னுடைய இரையானது அலகில் சிக்கியபோதிலும், தான் தனது கழுத்துக்குக் கீழே அந்த இரையைக் கொண்டு செல்லாமல் தனது பேடைக்காக வைத்துள்ள தன்மையே அதன் ஔதார்யம் ஆகும். ஆனால் இவன் செய்வது என்ன? நான் இங்கு உண்ணாமல் அவனை எண்ணி வாடும்போதிலும் அவன்

என்னை எண்ணவில்லை. ஆனால் நீ உனது பேடைக்காக இரையை விழுங்காமல் காக்கிறாய்; ஆக உனது தாராளம் என்பதைப்போல் அவனது தாராள மனம் இல்லை. (சிறுகுருகே) - சரியான நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பூனை போன்று உனது செயல் இருக்கவேண்டாம்; தூது செல்லும்போது மிகுந்த ஈடுபாடு உடையவர்கள் போன்றே உனது செயல் இருப்பதாக. (மல்குநீர்க் கண்ணேற்கு) – எனது கண்களில் கண்ணீர் பெருகி நின்றபடி, நீர்ப்பரப்பு போன்று உள்ளதை நீ கண்டாயா? ஆனால் தனது இரையைத் தேடுவதை நிறுத்திவிட்டு இவளை அந்தக் குருகுகள் பார்க்குமோ என்ற சந்தேகம் எழலாம்; நிச்சயம் பார்க்கும். ஏன்? இவளது கண்களும் மீன்களைப் போன்று அல்லவோ உள்ளன, ஆகையால் அவை நிச்சயம் பார்க்கும். (மல்குநீர்க் கண்ணேற்கு) - தன்னுடைய சோகத்தை நிரூபிக்க இவளது கண்ணீரே சாட்சியாகக் கொண்டிருக்கிறாள். அவனுடன் சேர்ந்துள்ளபோது ஆனந்தக்கண்ணீரும், பிரிந்து நிற்கும்போது துக்கக்கண்ணீரும் விட்டபடி உள்ளாள். (ஓர் வாசகங்கொண்டு) - "நேராக வந்து நிற்கவேண்டும்" என்று உரைக்காமல், "ஒரு வார்த்தை கூறுங்கள்" என்றாள். ஏன்? அவன் "வரமாட்டேன்" என்று மறுத்தால் என்ன செய்வது என்னும் பயத்தால் ஆகும். அவன் "வரமாட்டேன்" என்று மறுக்கின்ற வார்த்தையும் கூட இவள் ஏற்பாள் – காரணம், அவன் "வருகிறேன்" என்றால் தனது உயிர் தரிப்பாள். "மாட்டேன்" என்றால் முடிந்துவிடத் தயாராக உள்ளாள். அவன் ஏதும் கூறாமல் இருப்பதால் மட்டுமே துன்பமாக உள்ளாள். ஆகவே "மாட்டேன்" என்பதும் இவளுக்கு ஏற்புடையதே ஆகும். சிறியதிருமடல் - தாரான் தரும் என்றிரண்டத்தில் ஒன்றதனை – என்றது காண்க. மேலும் கீழே உள்ள வரிகள் காண்க:

- நாச்சியார் திருமொழி (13-9) – மெய்ம்மை சொல்லி முகம்நோக்கி விடைதான் திருமேல் மிகநன்று – "உன்னை நான் ஏற்கிறேன்" என்று தனது திருமார்புடன் சேர்ந்துக் கொண்டான் என்றால் நல்லது; அப்படி அல்லாமல் "நீ எனக்கு வேண்டாம்" என்று எனது முகம் பார்த்து உரைத்தால், எனது முடிகின்ற செயலுக்கு அனுமதி வழங்கினான் என்பதால் மிகவும் நன்று.

- திருவாய்மொழி (4-7-3) – பாவி நீ என்றொன்று சொல்லாய் - உன்னை என்னால் காண இயலாதபடி பாவம் செய்துள்ளேன். அதனை

உரைக்கும்விதமாக, "நீ பாவம் செய்தவன்" என்றாவது என் முன்பாக வந்து குற்றம் உரைத்தாலும் நான் உன்னைக் காண்பேனே.

(அருளாயே) – சீதை போன்று இவளும் பறவைகளைப் பார்த்து "அருளாய்" என்கிறாள்; இதன் காரணம் அந்தப் பறவைகள் மூலம் தனக்குக் கிட்டப்போவது பகவத் விஷயம் என்பதால், அவை மிகவும் உயர்ந்தவை ஆகும்; எனவே "அருளாய்" என்று மரியாதையாக உரைக்கிறாள். ஸ்வாமி பராசரபட்டரிடம் வந்த ஒருவர், "நம்பி ஏறுதிருவுடையான் தாஸர் திருநாட்டுக்கு நடந்தார்" என்று உரைத்தார். உடனே திகைத்துப்போன பட்டர், "அவர் திருநாட்டிற்கு எழுந்தருளினார் என்று கூறுங்கள், காரணம் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுடன் சேர்வதற்காகச் சென்றார் அல்லவோ", என்றார். இதன் மூலம் இங்குள்ள தனது தாழ்ச்சியையும், அங்குள்ளவர்களின் மேன்மையையும் வெளிப்படுத்துகிறார். ஆகவே பகவத் விஷயம் அத்தனை உயர்ந்தது என்றபடி.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவிருத்தம்

## இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த

## வ்யாக்யானம்

## மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 23)

20. சின்மொழிநோயோ கழிபெருந்தெய்வம், இந்நோயினதென்
றின்மொழிகேட்கு மிளந்தெய்வமன்றிது, வேலநில்நீ
என் மொழிகேண்மி னென்னமம்மனைமீருலகேழுமுண்டான்
சொன்மொழி, மாலையந்தண்ணந்துழாய்கொண்டுசூடுமினே

**பொருள் –** தலைவியின் தோழி அவளது தாய்மார்களிடம், "மிகவும் குறைவான சொற்களை மட்டுமே பேசுகின்ற இவளது நோயானது, மிகவும் பெரியவனாகிய ஸர்வேச்வரனால் உண்டானது. ஆனால், இவளது இந்த நோயானது ஏதோ ஒரு தாழ்வான தேவதையால் ஏற்பட்டது என்று சிலர் கூறும் பொய்யான வார்த்தைகள் போன்று க்ஷுத்ர தேவதையால் ஏற்பட்டது அல்ல. வேலனே! நீ தூரமாகச் செல்வாயாக. எனது தாய்மார்களே! நீங்கள் நான் கூறும் சொற்களைக் கேட்பீர்களாக. ஏழுலகங்களையும் உட்கொண்டவனின் திருநாமத்தை அன்றாடம் கூறியபடி இருப்பீர்களாக. அழகான குளிர்ந்த துளசிகளால் கட்டப்பட்ட மாலையைக் கொண்டு வந்து இவளுக்கு அளிப்பீர்களாக", என்கிறாள்.

**குறிப்பு -** இந்தப் பாசுரம் வெறிவிலக்கு என்ற துறையைச் சார்ந்தது ஆகும். தலைவன் நீண்ட நாள் பிரிந்து சென்ற காரணத்தினால் தலைவியின் உடல் மெலிந்து, வெளுத்து, பல மாறுதல்கள் அடைகின்றன. இதனைக் கண்ட அவளது செவிலித் தாய்மார்கள், "இவளது உடல் மெலியக்காரணம் என்ன?" என்று குறி சொல்பவளைக் கேட்கின்றனர். அப்போது அந்தக் குறி சொல்பவள், "இதற்குக்

காரணம் க்ஷுத்ர தேவதை அன்றி வேறு அல்ல. அந்த தேவதையை வணங்கினால் இது தீர்ந்துவிடும்", என்றாள். உடனே அவர்களும் அந்தத் தேவதையை பூஜிக்கத் தொடங்கினர். இதனை எதிர்பார்த்துக் காத்திருந்த அந்தத் தேவதையானது, உடனே அங்கிருந்த ஒருவன் மீது ஆவேசமாக வர, அவன் வெறியாட்டம் ஆடினான். ஆகவே குறி சொல்பவள் கூறியது உண்மை என்று நம்பிய அனைவரும் மேலும் ஈடுபாட்டுடன் நின்றனர். இதனைக் கண்ட தலைவி வருத்தத்துடன் நிற்க, அங்கு வந்த அவளுடைய தோழி துன்பத்திற்கான காரணத்தைத் தாய்மார்களிடம் விளக்கி, வெறியாட்டம் ஆடியவனை விலக்குவதே இந்தத் துறையாகும்.

**அவதாரிகை** - துறை வெறிவிலக்கு. மேகஸந்தர்சநத்திலே தோழியுந்தானும் மோஹித்துக் கிடக்க, இத்தசையைக் கண்டு சோகித்திருக்கிற திருத்தாயார் முன்னே தேவதாந்தர ஸ்பர்சமுடையார் புகுந்து பரிஹாரத்திலே ப்ரவ்ருத்தராக, அபிஜாதையுமாய் இவள் ப்ரபாவத்தையுமறிந்திருப்பாளொருதோழி கருமுகமாலையை "நீர்கொடுக்க" என்று நெருப்பிலே இடுவாரைப்போலே "இவளுக்குப் பரிஹாரம்" என்று தொடங்கி விநாசத்தை உத்பாதியாநின்றிகோள்" என்று அத்தை நிஷேதித்துக் கொண்டு இவளுடைய நோயையும் இந்நோய்க்கு நிதாநத்தையும் இதுக்கு பரிஹாரத்தையுஞ் சொல்லுகிறாள்.

**விளக்கம்** - மேகங்களின் சூழ்தலைக் கண்டதால் தோழியும் தலைவியும் மயக்கத்தில் ஆழ்ந்தனர். இதனைக் கண்ட தலைவியின் தாயார் மிகவும் வருத்தப்பட்டு நின்றாள். இதுதான் சரியான நேரம் என்று, ஸர்வேச்வரனைத் தவிர மற்ற அனைத்து தெய்வங்களையும் வணங்குபவர்கள் அங்கு வந்து, தலைவியின் இந்த நிலைக்கான பல பரிகாரங்களையும் கூறினர். உடனே தாய்மார்கள் அந்தப் பரிகாரங்களில் இறங்கினர். அப்போது இவளது துன்பத்திற்கான காரணத்தை முற்றிலுமாக அறிந்த தோழி ஒருவள் அங்கு வந்தாள். அபிஜாதை என்றால் ப்ரபந்நை என்று பொருள். "நல்லதான ஒரு மாலையை, மேலும் அதில் நீரைத் தெளித்து அதனால் புதிய மலர்ச்சியுடன் ஆக்கிக் கொண்டு வந்து கொடுக்க, அதனை நெருப்பில் வீசுபவர்கள் போன்று செய்கிறீர்களே! இவளுக்குப் பரிகாரம் செய்கிறோம் என்று கூறி இவளது ஸ்வரூபத்திற்கு நாசத்தை உண்டு பண்ணாதீர்கள்", என்றாள். மேலும் அவளுடைய நோய்க்கான காரணம் என்ன என்பதை விளக்கி, அந்த நோய்க்கான மருந்து என்ன என்பதைக் கூறி, அந்த நோயைப் போக்குவதற்கான வழியையும் உரைத்தாள்.

**வ்யாக்யானம்** - (சின்மொழி) சொல்லிற்றுச் சொல்லமாட்டாதவளவு. சப்தாவசேஷை என்னவுமாம். அங்ஙனேயாகில், இத்தசை கூடினபடி எங்ஙனேயென்னில்; "பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:" போலே. "சின்மொழி" என்றது – முக்தை. இம்முக்தையை விதக்தையாக்கும்போது, ஒரு விதக்தன் வேண்டாவோ? என்கிறது. ஸத்தாமாத்ர மென்னும்படியான இவளை உண்டாக்கும்போது ஒரு ஸர்வசக்தி வேண்டாவோ? (நோய் ஒ) பரிஹாரத்துக்குப் புகுந்தவள், நோயைக் கொண்டு கிடக்கப்பெறாதே இந்நோய்க்கு பரிஹாரம் சொல்லவிருப்பதே என்கிறாள். இவள் பருவமளவன்று கிட்டி இந்நோய், கைக்கூலி கொடுத்துக்கொள்ளவேண்டும் நோய். பகவத்விச்லேஷத்தில் தரியாமை ஸ்வரூபமாயிருந்தபடி. (கழிபெருந்தெய்வம்) கழிய – மிக்க, தெய்வம் - அவ்வருகில்லாததெய்வம். "பதிம்விச்வஸ்ய", "பதிம்பதீநம்" என்றும், "தமீச்வராணாம் பரமம் மஹேச்வரம்" என்றும், "அவிஜ்ஞாதம் விஜாநதாம்" என்றும், "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்றும் உபபாதிக்கிற ப்ரமாணங்களுக்கும் அவ்வருகாயிருக்கை.

**விளக்கம்** - ( சின்மொழி) - இதற்கு இரண்டு பொருள் உரைக்கலாம். அவையாவன - சிறிய வயதின் காரணமாகக் குறைவான சொற்கள் மட்டுமே பேசுபவள் அல்லது மிகுந்த துன்பம் காரணமாகக் குறைவான மொழி உடையவள் – எனலாம். முதல் பொருளுக்கான விளக்கம் அளிக்கிறார். இவள் மற்றவர்கள் கூறுவதை மீண்டும் சரியாக உரைக்க இயலாத சிறிய வயது என்று கொண்டால், இவ்விதம் தனது நிலையை வாய்விட்டுக் கூற இயலாதபடி ஸர்வேச்வரனின் விஷயத்தில் ஈடுபாடு உண்டாகி, அதனால் பிரிவாற்றாமை அடைந்தது எப்படி என்ற சந்தேகம் எழலாம். இதற்கு விடை அளிக்கிறார். இராமாயணம் பாலகாண்டம் (18-27) - பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த: - இளமைப்பருவம் முதலே லக்ஷ்மணன் இராமனிடம் அன்புடன் இருந்தான் – என்றது போல் இவளும் உள்ளாள். அதாவது தொட்டில் பருவத்திலும் பிரியமாட்டாத அன்பு என்றபடி. ஆனால் இவளுக்கு ஏற்பட்டுள்ள இந்த நோயானது இவளது பருவத்திற்கு ஏற்ற நோய் அல்லவே; பல சாதனங்களைக் கைக்கொண்டு, அதன் பின்னர் அல்லவோ இந்த நோய் உண்டாகும்? எம்பெருமான் மீது கொள்ளும் ப்ரேமையை "நோய்" என்று கூறுவது முறையா என்றால், நாமாகவே இதனை உண்டாக்கிக் கொள்வதால் பொருந்தும்.

ஸர்வேச்வரனைப் பிரியும் காலத்தில் உயிர் தரிக்க இயலாமை என்பதே ஸ்வரூபமாக உள்ளது. (கழிபெரும்தெய்வம்) – கழி என்றால் மிகுதியான என்பது பொருள், அதாவது மிகவும் பெரிய தெய்வம் என்றபடி. அல்லது வாக்குக்கு விஷயமாக வாக்கால் கூற முடியாத பெருமைகள் கொண்ட தெய்வம் என்றும் பொருள் கொள்ளலாம். கீழே உள்ள ப்ரமாணங்கள் காண்க:

- புருஷஸூக்தம் – பதிம் விச்வஸ்ய – இந்த உலகின் பதி
- பதிம் பதீநாம் - உலகின் அரசர்கள் அனைவருக்கும் மேலானவன்
- தம் ஈச்வராணாம் பரமம் மஹேச்வரம் – தான் ஈச்வரனாகவும், அனைத்து ஈச்வரர்களிலும் மேலான ஈச்வரனாகவும் உள்ளவன்.
- தைத்திரீயம் – யதோ வாசோ நிவர்த்தந்தே - யாரை அடைய இயலாமல் வாக்குகள் திரும்பினவோ.

**வ்யாக்யானம்** - (இந்நோய் இனதென்று) இந்நோயும் இந்நோய்க்கு நிதாநமும் இன்னதென்று, (இன்மொழி) அர்த்தரஹிதமான மொழி. (கேட்குமிளந்தெய்வமன்றிது) தனக்கில்லாதத்தையுண்டாக்கிச் செல்லப்புக்கால் கேட்டுக் கொண்டாடுந் தெய்வமன்றிது, கைக்கூலி கொடுத்துக் கவிபாடுவித்துக்கொள்ளும் தேவதைகளன்று. (இன்மொழி) வாசகத்துக்கு வாச்யம் போராது, புறம்பு; பகவத் விஷயத்தில் வந்தால், வாச்யத்துக்குத் தக்கவாசக சப்தம் போராது. (வேலநில் நீ) தன் கார்யத்தை நிஷேதிக்கப் புக்கவாறே "பெற்றதுடலாக க்ரஹிப்போம்" என்று பதறினான். இங்குப் புகுராதே கொள். "எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்" என்கிறாள். "கூராராழி வெண்சங்கேந்தி" என்று சொல்லுகிறபடியே கையுந்திருவாழியுமாகக் காணவேண்டியிருக்கிறவிடத்தே நீ கையும் வேலுமாக வந்து தோற்றுவதே.

**விளக்கம்** – (இந்நோய் இனதென்று) - இவளுக்கு வந்திருப்பது "இந்தகைய நோய்" என்றும், இதற்கான மருந்து அல்லது தீர்ப்பதற்கான வழி இத்தகையது என்றும். (இன்மொழி) – "இந்த நோய், இந்த க்ஷுத்ர தேவதையால் வந்தது" என்ற அர்த்தமற்ற சொல்லைக் கேட்க விரும்பும் ஏதோ க்ஷுத்ர தேவதையால் வந்தது அல்ல. இங்கு இன்மொழி என்பது "அர்த்தம் அற்ற சொல்" என்பதாகும். (கேட்குமிளந்தெய்வமன்றிது) – இந்த உலகில் உள்ள அனைத்து க்ஷுத்ர தேவதைகளும் தங்களுக்கு இல்லாத மேன்மைகளையும் பெருமைகளையும் மக்கள்

தங்களது சொற்களால் கூறும்போது, அதனைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து கொண்டாடியபடி உள்ளன. ஆனால் இவளுக்கு நோயை ஏற்படுத்திய தெய்வம் அப்படிப்பட்ட தெய்வம் அல்ல. மக்கள் வேண்டியதை உடனே அளித்துவிட்டு, அதன் பலனாகத் தன்னைப் புகழவேண்டும் என்று எதிர்பார்க்கும் தேவதைகள் போன்ற தெய்வம் இது அல்ல. (இன்மொழி) - மற்ற தேவதைகளைப் பொறுத்தவரையில் கூறப்படும் சொற்கள் என்பது உள்ள அளவிற்கு அந்தந்த தேவதைகளின் பெருமை இருக்காது; ஆனால் பகவத் விஷயத்தைப் பொறுத்தவரை இவனுக்கு உள்ள பெருமைகளைக் கூறும் அளவிற்குச் சொற்கள் இருக்காது. (வேலநில் நீ) – தோழியானவள் அங்கு வந்து, தன்னைப் பற்றி உயர்வாகக் கூறியபடி உள்ள குறிசொல்பவளின் சொற்கள் தவறு என்று கூறியதைக் கண்ட வேலன் (வேலை உடையவன், முருகன்) பதறினான். அவன் அங்குள்ளவர்களிடம் வெறியாட்டம் ஆடுபவன் மூலமாக, “இவளை நாம் பெற்றது போன்று பாதுகாப்போம்”, என்று ஏதேதோ கூறினான். ஆனால் தோழியோ, “இங்கு நீ புக நான் விடமாட்டேன். திருப்பல்லாண்டில் – எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் – என்று கூறியதற்கு ஏற்ப நாங்கள் உள்ளோம்”, என்றாள். திருவாய்மொழியில் (6-6-1) - கூராராழி வெண்சங்கேந்தி – என்று கூறுவதற்கு ஏற்ப நாங்கள் இங்கு ”திருவாழியும் கையும்” என்று ஸர்வேச்வரன் வந்து நிற்பதையே காண விரும்புகிறோம். ஆனால் இந்த நேரத்தில் நீ வேலும் கையுமாக வந்து நிற்கிறாயே! விலகிச் செல்வாயாக.

**வ்யாக்யானம்** - (என்மொழிகேண்மின் என்னம்மனைமீர்) ”அம்மனைமீர்!” என்று ஸம்போதித்து, நான் சொல்லுகிற வார்த்தையைக் கேளுங்கோள் என்கிறாள். ”புத்ரகா இதி ஹோவாச”. சிஷ்யர்களைப் புத்ரர்களைச் சொல்லுமாபோலன்றியே ”அம்மனைமீர்” என்பானென்னென்னில், இவ்வர்த்தமிவர்களுக்கு அபூர்வமில்லாமை. தாங்களிவ் வர்த்தத்திலே தேசிகராயிருக்கச்செய்தே, வ்யதிரேகத்தில் இவள் கலங்கின கலக்கங்கண்டு கலங்கினபடி. (உலகேழுமித்யாதி) ப்ரளயாத்யாபத்து வந்தால் ஜகத்தை வயிற்றிலே வைத்து ரக்ஷிக்கும் ஸர்வேச்வரனுடைய திருநாமத்தைச் சொல்லு. ஜகத்துக்காக வந்த நோயைப் பரிஹரிக்குமவன் இவளுடைய நோயைப் பரிஹரிக்கவே, ஜகத்தடையப் பரிஹரித்தாமிறே. ஜகத்துக்காக உண்டான நோய் இவளொருத்திக்குமே யுண்டானபடியாலே. (மாலையந்தண்ணந்துழாய் கொண்டு சூட்டுமினே) அவன் தோளிலிட்ட அழகிய திருத்துழாயைக் கொண்டு இவள்மேல் ஸ்பர்சிப்பது. “சொன்மொழி” என்று உள்ளே உபஜீவிக்கும் மருந்தும், ”தண்ணந்துழாய் கொண்டு

சூட்டுமின்" என்று மேற்பூசும் மருந்தும். தேவதாந்தர ஸ்பர்சமும் தத்ஸம்பந்தி ஸ்பர்சமும் இவர்க்கு ஸத்தயா பாதகமாயிருந்தபடியும், பகவத் ஸ்பர்சமும் பாகவத ஸ்பர்சமும் ஸத்தயா தாரகமாயிருந்தபடியும் சொல்லுகிறது.

**விளக்கம்** - (என்மொழிகேண்மின் என்னம்மனைமீர்) – தோழியானவள், "தாய்மார்களே! எனது சொற்களைக் கேட்பீர்களாக", என்கிறாள். தன்னைக் காட்டிலும் வயதில் சிறியவர்களுக்கோ, சிஷ்யர்களுக்கோ அல்லது புத்திரர்களுக்கோ மட்டுமே உபதேசம் செய்வதை நாம் காண்கிறோம். இவ்விதம் வயதில் அதிகமாக உள்ளவர்களுக்கு உபதேசம் செய்த நிகழ்வு ஏதேனும் உண்டா என்று கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார் – இதி ஹோவாச - என்கிறார். ஏதோ ஒரு காரணத்தால் பித்ருக்கள் அனைவரையும் நான்முகன் சபித்துவிடுகிறான். அந்த சாபத்திற்கான விமோசனம் என்னவென்றால் அவர்கள் மிகவும் இளையவனாக உள்ள சுக்கிரனிடம் உபதேசம் கேட்கவேண்டும் என்பதாகும். அப்போது அங்கு சுக்கிரன் வந்து, அவர்களுக்கு அப்படியே செய்தான். இதனையே இவர் இங்கு உதாரணம் காட்டுகிறார். ஆனால் சுக்கிரன் "புத்ரகா" என்று கூறிய பின்னர் உபதேசிப்பது பொருத்தமாக உள்ளது, இவள் "அம்மனைமீர்" என்று கூறிய பின்னர் உபதேசம் செய்வது பொருந்தவில்லையே என்று கேட்கலாம். அவர்கள் ஏதும் அறியாதவர்கள் என்பதால் சுக்கிரன் அவ்விதம் அழைத்தான். இவர்கள் பகவத் விஷயம் அனைத்தும் அறிந்தவர்கள் என்பதால் இவ்விதம் இவள் கூறுகிறாள். இவர்கள் பகவத் விஷயம் பற்றி அனைத்தையும் அறிந்தவர்கள் என்றால் இவ்விதம் நடந்துகொள்வார்களோ என்ற சந்தேகம் எழலாம். இவள் இவ்விதம் இருப்பதற்குக் காரணம் எம்பெருமானுடைய பிரிவே என்று இவர்கள் அறிந்துள்ளபோதிலும், இவளிடம் கொண்ட அன்பு காரணமாக இவளது கலக்கத்தைக் கண்டு தாங்களும் தடுமாறினார்கள் என்று கருத்து. (உலகேழுமித்யாதி) – ப்ரளயத்தின் ஆபத்திலிருந்து அனைத்தையும் காப்பாற்றும் பொருட்டு, அனைத்தையும் தனது திருவயிற்றில் வைத்துக் காப்பாற்றியவனுடைய திருநாமத்தை இவளிடம் உரைப்பீர்களாக. இதனைக் கேட்ட தாய்மார்கள், "உலகிற்கு ஆபத்து வந்தால் காப்பாற்றுவான். இவள் ஒருத்திக்காக வந்து காப்பானோ?'', என்றனர். இதற்குத் தோழி, "இவளுடைய நோயை நீக்கும்விதமாகவே அவன் உலகையே காத்து நின்றான். இந்த உலகிற்கு ஏற்பட்ட நோய் இவள் ஒருத்திக்கு மட்டுமே உண்டானது எனக் கொள்க", என்றாள்.

(மாலையந்தண்ணந்துழாய் கொண்டு சூட்டுமினே) - அவனது திருத்தோள்களில் உள்ள குளிர்ந்த அழகான துளசிமாலையைக் கொண்டு வந்து இவளது சரீரத்தில் படும்படிச் செய்யுங்கள். “சொன்மொழி” என்பது உள்ளே சென்று இவளைக் குணப்படுத்தும் மருந்து என்றும், ” தண்ணந்துழாய் கொண்டு சூட்டுமின்” என்பது வெளியில் பூசப்படும் மருந்து என்றும் கருத்து. மற்ற தேவதைகளின் தொடர்பு என்பதும், அந்தத் தேவதைகளின் தொடர்பு கொண்டவர்களின் தொடர்பு என்பதும் இவருக்கு பாதகமாகவே இருந்தது. எம்பெருமானின் தொடர்பு என்பதும், பாகவதர்களின் தொடர்பு என்பதும் இவருக்கு உயிர் தாங்க ஏற்றதாக உள்ளது என்று கருத்து.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்